மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 20/2022 |
| பெயர் | : | ஆறுமுகம் (PW9) |
| க/பெ | : | இசக்கிமுத்து |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | |

(Accused Chithirai is present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 3069 (Central Act 66 of 3069) on the 6th day of June 2023

**முதல் விசாரணை**

1) நான் திருமலைகொழுந்துபுரம் ஊரில் வசிக்கிறேன். நான் விவசாய கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர்தான். அசா 1 பேச்சியம்மாள், அசா 2 விஜி, அசா 3 பேச்சியம்மாள், அசா 4 செல்லம்மாள், அசா 5 மாரியம்மாள், அசா 6 முத்துலட்சுமி , அசா 7 சுடலி,அசா 8 அங்கம்மாள் ஆகியோர்களை தெரியும். பட்டியல் சாட்சிகள் 10 லிருந்து 27 வரை உள்ளவர்களை தெரியும்.

2) 16.02.2021ம் தேதி காலை 7 மணிக்கு ஆஜர் எதிரிக்கு சொந்தமான குட்டியானை வாகனத்தில் திருமலைக்கொழுந்துபுரம் மற்றும் மனப்படைவீடைச் சேர்ந்த மொத்தம் 35 பெண்கள் திருமலைக்கொழுந்துபுரத்தில் இருந்து கிழும்பி மனப்படை வீடு , திருத்து சிவலப்பேரி வழியாக மணியாச்சிக்கு சற்று முன்பாக உளுந்தன்குலை அறுப்பதற்காக வந்தபோது மணி 8.15 இருக்கும். மணியாச்சி ஊருக்கு மேற்புறம் உள்ள வாய்கால் பாலத்திற்கு வடபுறம் உள்ள குட்டையில் நேரமானதால் வேகமாக வந்த குட்டியானை வாகனம் கவிழ்ந்துவிட்டது.

3) அதில் எனக்கு இடுப்பில் காயம் ஏற்பட்டது . விபத்தில் 15க்கும் மேற்பட்டவர்களுக்கு காயம் ஏற்பட்டது. மனப்படைவீடு கிராமத்தைச்சேர்ந்த 5 பெண்கள் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். அவர்கள் பெயர்கள் எனக்கு தெரியாது.

4) சம்பவம் நடந்த 17 வது நாளில் எங்கள் ஊரை சேர்ந்த ஒரு பெண் இறந்துவிட்டார். காயம்பட்ட எங்களை சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். விபத்தில் காயம் ஏற்பட்டதற்கும் , 6 நபர்கள் இறந்ததற்கும் காரணம் குட்டியானை ஓட்டுனரான எதிரி சித்திரைதான்.போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

(எதிரி ஆஜர் சந்தர்ப்பம் அளித்தும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று எடுத்துரைப்பு செய்யப்பட்டது )

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.